செ.வெ.எண்:21/2016 நாள்:10.11.2016

## சிவகங்கை மாவட்டம்

## மாவட்ட அளவிளான நீர் பாசன அமைப்புகள் மேம்படுத்துதல் தொடர்பாக நடை பெற்ற கருத்தரங்கை

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி இ.ஆ.ப., அவர்கள் தலைமையெற்று துவக்கி வைத்தார்

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாக சமுதாய கூடத்தில் மாவட்ட அளவிளான நீர் பாசன அமைப்புகள் மேம்படுத்துதல் தொடர்பாக நடை பெற்ற கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி இ.ஆ.ப., அவர்கள் தலைமையெற்று துவக்கி வைத்தார்

கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் தெரிவித்தாவது,

நமது மாவட்டம் அதிகமான நீர்நிலைகள் உள்ள பகுதியாகும் முறையாக நீர்நிலைகளை பாரமரித்தால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர வாய்ப்புள்ளது நீர்நிலைகளில் வரத்து கால்வாய் மற்றும் நீர் வெளியேற்றும் வழிதடங்களில் உள்ள கருவேல மரங்கள் அகற்றி நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும் அதை போர்கால அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும்.

மேலும் விவசாயிகள் காலமாற்றத்திற்கு ஏற்ப நவின வசதிகளை பயன்படுத்தி விவசாய முறையினை மாற்றி கொள்ள வேண்டும் நீர் பற்றாக்குறையாக உள்ளதால் சொட்டு நீர்பாசனத்திட்டம், நுண்ணுயிர் பாசனத்திட்டம் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்து விவசாயத்தை செம்மையாகவும் அதிகமகசூல் என்ற இலக்கை எட்டமுடியும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி.,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு து.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி காஞ்சனா, வேளாண்மை இணைஇயக்குநர் திரு.செல்வம், வேளாண்மை துணைஇயக்குநர் திரு கண்ணன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு. மதியழகன்(பொது),திரு.சுதர்சன்(வேளாண்மை), தோட்டக்கலை துணைஇயக்குநர் ராஜேந்திரன், செயற்பொறியாளர்கள் முன்னாள் ஜமின்கண்மாய் கோட்டம் சுந்தரமுர்த்தி, சருகனியாறு திரு.அழகேசன், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையம் பேராசிரியர் முனைவர் செந்தூர்குமரன், துறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனார்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.